# கிருபையுள்ள வார்த்தை®

**GRACIOUS WORD** Luke 4:22

Vol - 15 | October அக்டோபர் | 2013

ஆண்டு சந்தா ரூ. 100/- தனிப் பிரதி ரூ. 8/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


## நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

எபிரெயர் 4 : 16


கௌரவ ஆசிரியர் Betty Choate ஆசிரியர் PCPR

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

நாம் பாவங்களைக்... 3

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? 6

யோபுவின் உள்ளான... 9

எல்லாரும் குணமாக்கும்... 13

கர்த்தர் யோசேப்புடன்... 19

உங்கள் வாழ்க்கையில்... 20


*In memory of*

**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors* : BETTY CHOATE
JERRY & PAULA BATES

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா**, M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D.,
**C. ஷியாமிலன் கார்த்திக்**, B.Sc.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**"பாவங்களை போக்க உதவும் பரிசுத்த வார்த்தை"**

## கிருபையுள்ள வார்த்தை
## TV நிகழ்ச்சிகள்



### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை - 6.45
வெள்ளி காலை - 6.00


### Holy Cross T.V.
(புதுச்சேரி)


ஞாயிறு காலை - 6.30

### King of Glory T.V.
(திருநெல்வேலி)

ஞாயிறு காலை - 6.00

செய்திபாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)





விசேஷ ஆங்கில THE VOICE OF TRUTH INTERNATIONAL இதழ் கிடைக்கும் தபால் செலவு மட்டும் அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்!

# நமது பாவங்களைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்?

## About Our Sins, What should we do?



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

தேவனுடைய வார்த்தையின் மீது தாகமும் வைராக்கியமும் கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! உங்கள் யாவரையும் சர்வலோகத்தின் பாவங்களையும் சிலுவையிலே சுமந்து தீர்த்த சர்வவல்ல ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலே வாழ்த்தி, இவ்விதழ் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்பானவர்களே ! நாம் இந்த மாதம் எபி 4:11–16 வசனங்களிலிருந்து பாவங்களை குறித்தும், நமது பாவங்களை குறித்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை குறித்தும் தியானம் செய்வோம்.

பிரியமானவர்களே! தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் பாவம் பயங்கர விளைவைக் கொண்டுவருகிறதாக இருக்கிறது. பாவம் நமது இருதயத்தை கடினப்படுத்துவதாகவும், நமக்குள் அவிசுவாசத்தை உண்டாக்குவதாகவும் இருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இஸ்ரவேலர்கள் ஆறு இலட்சம் பேரும் எகிப்தில் இருந்து கானானுக்குள் நுழைய முடியாமல் செய்துவிட்டது. எபி 4:11 “ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.”

இப்படிப்பட்ட நிலைமை கிறிஸ்தவர்களாகிய நம்மீதும் வரக்கூடும். ஏனெனில் பாவம் பயங்கரமானது. இந்த செய்தியின் வழியாக தேவபிள்ளைகளாகிய நாம் பாவத்தைக்குறித்து என்ன செய்ய வேண்டும் என்று அறிய முயலுவோம்.

### 1. பாவங்களை நாம் மறைக்க முடியாது.

நம்மில் அநேகர் பாவங்களை மறைக்கின்றோம் (யாருக்கும் தெரியக்கூடாமல்), மறுக்கின்றோம் (நான் செய்யவில்லை) அல்லது சாக்குப்போக்குகளை (நான் ஏன் செய்தேன் தெரியுமா?) கூறுகின்றோம்ஆனால், பாவங்களை மறைப்பது சாத்தியமற்றது. வசனம் பாவங்களை வெளிப்படுத்தும்.

எபி 4:12, தேவனுடைய வார்த்தையானது ஜீவனும்

வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்க உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. இஸ்ரவேலர்கள் வசனத்தை கவனிக்க மறந்தது அவர்கள் விழுந்துபோக காரணமானது. தேவனுடைய வார்த்தை ஜீவனும் வல்லமையும் உள்ளதாக இருக்கிறது. வல்லமை என்பது ஆற்றல் உள்ளது. அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும். (ஏசா 55:11).

தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம். கத்தி என்பது நோயாளியின் உடலின் உள்ளே இருப்பதை ஆபரேஷன் மூலம் அகற்ற உதவும். வேத வசனமும் அவ்வாறே நமக்குள் இருக்கும் பாவங்களையும் வெளியே கொண்டுவரும். கர்த்தருடைய வசனம் எல்லா விஷயங்களையும் வெளியரங்கமாக்குகிறது. நாம் திறந்த மனதுடன் படித்தால், நமது உண்மையான இயல்பை நாம் காண முடியும் (யாக் 1:22-25).



பாவம் நமது இருதயத்தை கடினப்படுத்துவதாகவும், நமக்குள் அவிசுவாசத்தை உண்டாக்குவதாகவும் இருக்கிறது.

## 2. தேவன் எல்லாவற்றையும் அறிகிறார்.

நாம் பாவம் செய்யும்போது தேவன் அதனை அறிகிறார். எவர் ஒருவரும் தேவனிடமிருந்து தம்மை ஒளித்துக்கொள்ள முடியாது. எபி 4:13, "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்".

அடிபட்ட உடலில் வடு (தழும்பு) இருக்கிறது. உடை அந்த தழும்பு வெளியே தெரியாதபடி மறைக்கிறது. உலகத்திற்கு வேண்டுமானால் நம் உடை நமது வடுவை மறைக்கலாம். ஆனால், உடையை களைந்தவுடன் அந்த வடு நமக்கு தெரியும். நாம் நமது பாவங்களை உலகத்திற்கு மறைக்கலாம். ஆனால், எல்லாம் அறிந்த தேவனிடமிருந்து மறைக்க முடியாது. நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு இரக்கத்திற்கு தேவனிடம் திரும்ப வேண்டும்.

**3. பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.**

நாம் நமக்காக இறக்கப்படும் பிரதான ஆசாரியரைக் கொண்டுள்ளோம். எபி 4:15 "நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்''. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவ நிலையை மாற்றதக்கதான பிரதான ஆசாரியராக இருக்கிறார்.

மேலும், இவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்தியமான பிரதான ஆசாரியராயிருக்கிறார். பாவமில்லாத, நம் மீது இரக்கம் கொண்டு பரிதபிக்கிற பிரதான ஆசாரியராக இயேசு நமக்கு இருக்கிறார் என்பது மிகவும் நம்மை பெலன் கொள்ளச் செய்வதாயிருக்கிறது.

**4. நாம் தைரியத்துடன் கிருபாசனத்தண்டை சேரலாம்.**

நாம் தைரியத்துடன் அவருக்கு முன்பாக வர முடியும். எபி 4:16 "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.'' **ஒரு நாளில் நியாயாசனமாக போகும் இயேசுவின் அரியணை இன்று நமக்கு கிருபாசனமாக உள்ளது.** ஆகையால் நாம் இரக்கத்தை பெறவும், சகாயம் செய்யும் கிருபையை அடையவும் கிட்டி சேர்வோம்.

ஒருவர் இரட்சிக்கப்பட தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபை தேவை; மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் நிலைத்திருக்கவும் கிருபையும், இரக்கமும் தேவைப்படுகிறது. தேவையான நேரத்தில் நமக்கு உதவ அவரிடம் நெருங்கிச் சேர்வோம்.

**இறுதியாக...**

பிரியமானவர்களே ! பாவம் பயங்கரமானது, தேவனுடைய வார்த்தை நமது பாவங்களை வெளிப்படுத்தும். தேவனும் நம்முடைய பாவங்கள் எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். ஆயினும் நமக்கு உதவி செய்ய பிரதான ஆசாரியராக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்று நித்தியத்தில் அவரோடு வாழ, இன்றே மனந்திரும்பி நம்முடைய வழிகளை அவருக்கு நேராக நேர்ப்படுத்துவோம். இரக்கம் நிறைந்த தேவன் நமக்கு உதவி செய்வாராக. ஆமென் !

# 13 "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?"

## Is Christ Divided?



J.C. CHOATE

ஒரு சமயத்தில், கொரிந்து சபையிலே பிரிவினையானது தலைதூக்க ஆரம்பித்தது. அதின் விளைவாக பவுல் எழுதுகிறார், ''சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துகூன் நாமத்தினலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 11. ஏனெனில் என் சகோதரரே உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. 12. உங்களின் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன். 13. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? 14. என் நாமத்தினலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாத படிக்கு 15. நான் கிறிஸ்துவுக்கும் காயவுக்குமேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். 16.

ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுல்லாமல் இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். 17. ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்'' (1 கொரி 1:10-17). ஆகையினால் பவுல், பிரிவினையை கண்டித்து, ஒற்றுமைக்காக அறைகூவல் விடுக்கிறார்.

பவுலைப் பின்பற்ற விரும்பினவர்கள் கொரிந்துவிலே இருந்தனர்; மற்றவர்கள் அப்பொலோவையும் மற்றவர்களையும் விரும்பினர். தெளிவாக தெரிவது என்னவெனில் இந்த சகோதரர்கள் தங்களுடைய சிந்திக்கும் சக்தியை முழுமையாக இழந்துவிட்டனர், மேலும் அவர்களை சிந்திக்க வைக்க பவுல் சில கேள்விகளை கேட்டார். அவருடைய முதல் கேள்வி : ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?.'' அவர் பிரிந்திருக்கவில்லை என்று

அவர்களுக்குத் தெரியும், ஆகையினால் தங்களுடைய பேச்சில் நியாயமில்லை என உணர்ந்திருந்தனர். அடுத்ததாக அவர் கேட்ட கேள்வி: ‘‘பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்?’’ இவைகளுக்கான அவர்களுடைய பதில், ‘இல்லை’ என்பதாகவே இருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் பவுல் அவர்களுக்காக சிலுவையில் அறையப்படவில்லை. பவுல் அவர்களுடைய இரட்சகர் இல்லை என்று அவர்கள் அறிந்திருந்தனர். இதே காரியம், தங்கள் எஜமான்கள் (தலைவர்) என்று பிற தனிநபரை சுட்டிக்காட்டிய பிறருக்கும் பொருந்தும். கடைசிக் கேள்வி என்னவெனில்: ‘‘நீங்கள் பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?”. தாங்கள், பவுலின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெறவில்லை என அவர்களுக்குத் தெரியும்; மாறாக, கிறிஸ்துவின் நாமத்தினாலேயே என்று அறிந்திருந்தனர். அவர்கள் மட்டுமல்ல, மற்ற யாருமே எந்த ஒரு மனிதனின் நாமத்தினாலும் ஞானஸ்நானம் பெறாமல், மாறாக, தேவனுடைய குமாரனின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகையினால் பவுல் அவர்களுக்கு, தங்களைப் போன்ற மனிதர்களை கனப்படுத்தி திருப்திப்படுத்துவதற்காக சிறு சிறு குழுவாக பரிவதின் பரிதாப நிலையை வெளிக்காட்டுகிறார்; ஆனால் உண்மையிலேயே அவர்கள் தங்கள் இரட்சகராகிய கிறிஸ்துவை மட்டுமே கனப்படுத்த வேண்டும்.



அமைதியாக தேவனோடு ஜெபத்தில் உறவாடவும், அவர் நமக்கு போதித்த கட்டளைகளை நினைவு கூறவும் செய்யலாம்.

கொரிந்து சபையிலே பிரிவினை புகுந்துவிட்டபடியினாலேயே, தன்னுடைய பெயரை வேறு யாரும் சூட்டிக்கொள்ளாதபடி தான் யாருக்கும் திருமுழுக்கு கொடுக்கவில்லை என பவுல் சந்தோஷப்பட்டார். இந்த அடிப்படையில், ஆண்டவர் தன்னை திருமுழுக்கு கொடுக்க அல்ல சுவிஷேசத்தை பிரசங்கிக்கவே அனுப்பினார் என பவுல் விளக்குகிறார். மற்றொரு வார்த்தையில் சொன்னால், தன்னை சுவிஷேசம் பிரசங்கிக்க ஆண்டவர் அனுப்பினார் என்று பவுல் கூறுகிறார்; அதினால் நமக்கு புரிவது என்னவெனில், சுவிஷேசம் பிரசங்கிக்கப்பட்டால், சத்தியத்தை நேசித்து அதற்கு கீழ்படிபவர்கள் இருந்தால் நிச்சயமாக ஞானஸ்நானம் பின்தொடரும். மேலும், நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், சுவிசேஷம் என்பது உண்மையான கிறிஸ்தவர்களையே உருவாக்கும், அதாவது கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக மட்டும்.

அப்படியானால், நிச்சயமாக, சுவிஷேசமானது பிரசங்கிக்கப்பட்டு கீழ்படிதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது வேறு யாரையும் அல்ல, தேவ

பிள்ளைகளையே உண்டாக்கும். சுவிஷேசமானது இந்த வகை கிறிஸ்தவரையோ அந்த வகை கிறிஸ்தவரையோ உருவாக்காது ;

சுவிஷேசம் அப்படி இதுவரை வகை வகையான கிறஸ்தவர்களை உருவாக்கியதும் இல்லை, உருவாக்கவும் செய்யாது. சத்தியமானது ஜனங்களை ஒன்றுசேர்க்குமே தவிர, அவர்களை சிதறடிக்காது.

கொரிந்துவில் இருந்த சபையானது, ஆண்டவர் தங்களுக்கு போதித்தவைகளின் அடிப்படையில் பிரிந்திருக்கவில்லை, மாறாக தங்களுடைய சொந்த எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையிலேயே பிரிந்தனர். இதே காரியம் தான் இன்றும் உண்மையாக உள்ளது. மக்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் பிரிந்திருப்பது பைபிள் தங்களுக்கு போதிப்பதின் அடிப்படையில் அல்ல ; மாறாக, தங்கள் சுய எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையிலேயே. இதனாலேயே அன்று கொரிந்து சபை கண்டிக்கப்பட்டது, இன்றைய மத உலகமும் கண்டனத்திற்கு உள்ளாகிறது.

பிரிவினை என்பது ஒரு மோசமான காரியம். அது இருதய வலியையும், துக்கத்தையும், வெறுப்பையும் எல்லாவற்றிற்கும் மேலாக, இலட்சக்கணக்கான ஜனங்கள் பரலோகத்தை இழந்துபோகவும் செய்யும். இப்படிப்பட்ட பிரிவினையானது பிசாசினால் உண்டானது, மேலும் அது அடிப்படையிலேயே பாவமுள்ளது. ஆண்டவர் பிரிவினையை வெறுக்கிறார்; மேலும் சிலுவையின் நிழலிலே அவர் கூறியது, நாம் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதே! (யோ 17). பின்னாளிலே பவுல், ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் மற்றும் ஒரே தேவன் என்று கூறியதினால் ஒற்றுமைக்கான ஒரு திட்டத்தை கொடுக்கிறார் (எபே 4:1-6)

கிறிஸ்து பிரிந்திருக்கவும் இல்லை, அவர் நாம் பிரிந்திருக்கும்படி விரும்பவுமில்லை ; மாறாக, தானும் பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல, அவர் நம்மையும் ஒன்றாயிருக்கும்படி விரும்புகிறார். ஒரு நபர் நாமகர்ணக் கூட்டத்தை (பிரிவினை சபைகளை) மேன்மைப்படுத்துவாரேயானால், அவர் பிசாசின் வேலையை மேன்மைப்படுத்துகிறார்; மேலும், ஒரு நபர், நாம் யாவரும் ஒன்றாயிருக்க முடியாது எனக் கூறுவாரேயானால், அவர் தேவனுடைய வார்த்தையை மறுதலிக்கிறார்.

ஆகையினால் தான், **கிறிஸ்துவின் சபையானது** எங்குமுள்ள மனுஷர் எல்லாரிடமும், தாங்கள் பேசும் மற்றும் செய்யும் காரியங்களுக்கு, பைபிளிடம் மட்டுமே திரும்பும்படி கூறுகிறது. அதாவது **பைபிள் பேசுகின்ற இடத்தில் பேசவும், பைபிள் அமைதி காக்கும் இடத்தில் அமைதி காக்கவும்** வலியுறுத்துகிறது ; அதாவது பைபிள் காரியங்களை பைபிள் சொல்லும் விதமாகவே செய்யுங்கள். ஆம் ! நாம் வசனத்தின் படியான ஒற்றுமைக்காக முயற்சி செய்வோம்.

# 8 யோபுவின் உள்ளான குழப்பம்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

கடந்த பாடத்தில் யோபுவுக்கு நேர்ந்த சோதனைகளைப்பற்றி பார்த்துதோம். இந்தப் பாடத்தில் அவனுக்குள்ளே எழும்பிய புயலை சற்று ஆராய்வோம். இதற்குள் யோபு நம்மிலே ஒருவனாக, நம்முடைய நெருங்கிய நண்பனாக மாறி இருப்பான் என்று எண்ணுகின்றேன். நம்மில் பலர் அவனைப் போலவே அநேக சோதனைகளுக்குள்ளாக்கப் பட்டிருப்போம். ஆகவே அந்த அடிப்படையில் நம்முடைய சகோதரனைப் போலவே அவனை எண்ணி, நம்மை அவனுடைய ஸ்தானத்தில் வைத்துப் பார்ப்போம்.

ஒரு நாள் மாலை நேரம், வானம் இருண்டது. கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. திடீரென்று பேரிரைச்சலுடன் இடி, மின்னலோடு மழை பெய்ய ஆரம்பித்தது. தெரு விளக்குகளும் சிறிது நேரத்தில் அணைந்து போயின. எங்கு பார்த்தாலும் கும்மிருட்டு, பாதையிலே நடப்பவரை கூட கண்டுகொள்ள முடியவில்லை. எங்கும் அந்தகாரம். அந்த பயங்கரமான நிலையில் ஒரு உருவம் தன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது. சடிதியில் ஒரு மரம் வேரோடு சாய்ந்தது. இன்னும் ஒரு கணம் தாமதித்திருந்தால் அவன் மேலேயே விழுந்து இருக்கும். கையிலிருந்த டார்ச்லைட் வெளிச்சத்தில் உருவத்தை நோக்கினேன்.

அவன் என் நண்பன். ஏனப்பா இவ்வளவு பயங்கரமான இருட்டில் தன்னந்தனியாக எந்தவிதமான பயமுமில்லாமல் சென்று கொண்டிருக்கிறாயே' என்று கேட்டதற்கு அவன் அளித்த பதில் என்னை சிந்திக்க வைத்தது. ''எனக்குள்ளே எழும்பி என்னை அலைக்கழிக்கும் புயலை நீ அறிவாயானால், என் மனம் படும் போராட்டத்தை உணர்வாயானால், நீ காணும் இந்த புறம்பான இடி மின்னல்கள் இருட்டை, ஒரு பொருட்டாக எண்ணமாட்டாய்" என்றான்.

உங்களில் யாரேனும் இப்படிப்பட்ட நிலையில் இருந்திருக்கிறீர்களா? நமக்கு ஏற்படும் துன்பங்களில், நமக்குள்ளே எழும்பும் மனப்போராட்டங்களைப் போல பெரியது எதுவும் இருக்க முடியாது. சங்கீதக்காரனும் அப்படிப்பட்ட சங்கடத்தில் இருந்திருக்கிறான். “என் ஆவி என்னில் தியங்குகிறது. என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது” (சங் 143:4). “மனுஷனுடைய ஆவி

அவன் பலவீனத்தை தாங்கும். முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்” என்றார் சாலமோன் (நீதி 18:14).

சாத்தானோடு நமக்கிருக்கும் போராட்டங்களில் பெரியது, நமக்குள்ளே எழும் போராட்டங்கள். நமக்கு புறம்பே ஏற்படும் எத்தனையோ காரியங்களை நம்மால் தவிர்க்க முடியாது. ஆனால் நமக்குள்ளே ஏற்படும் காரியங்களை கட்டுப்படுத்தக்கூடும். நண்பன் யோபு நமக்கு உதவி செய்வார்.

**முதலாவது, தனிமை:**

கசப்பான துயரம் தனிமையைத்தான் நாடும். யோபுவும் தனிமையில் சாம்பலில் உட்கார்ந்திருக்கிறான். தனிமைக்கும் ஏகாந்தத்துக்கும் வித்தியாசமுண்டு. பலர் சூழ இருப்பினும், ஒருவன் தனிமையை உணரமுடியும். யோபு, குடும்பம் நண்பர்களால் கைவிடப்பட்டும் தனிமையின் உச்சகட்டத்தை



கர்த்தருடைய வசனம்
எல்லா விஷயங்களையும்
வெளியரங்கமாக்குகிறது.
நாம் திறந்த மனதுடன் படித்தால்,
நமது உண்மையான இயல்பை
நாம் காண முடியும் (யாக் 1:22-25).

எப்பொழுது உணர முடிந்தது என்றால், கர்த்தரும் தன்னை கைவிட்டார் என்று எண்ணக்கூடிய நிலை வந்தபொழுது தான் (யோபு 23:3-9).

கிறிஸ்து பட்ட பாடுகளின் உச்சகட்டம், சிலுவையிலே உலகத்தின் பாவங்கள் எல்லாம் அவரை அழுத்த, தேவன் தம் குமாரனை கைவிட்டபோது முறிந்த ஆவியோடே அண்ணல் இயேசு தனிமையில் கதறுகிறார். “என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?” மருத்துவர்கள் தனிமை தான் இருதய நோவுக்கு காரணம் என்று கூறுவர். இருந்த போதிலும் கர்த்தர் நம்மோடு கூட இருப்பின் நாம் என்றும் தனிமையில் இருக்க மாட்டோம். இது யோபுவின் விஷயத்தில் உண்மைதான். ஆனால் யோபு அப்பொழுது அறியவில்லை.

கிறிஸ்து மரித்து உயிர்தெழுந்து பரமேறிச் செல்லுமுன்னர், பிரதான கட்டளையை கொடுத்தபோது அவர் கூறியதாவது, “ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் **நான் உங்களுடனே கூட இருக்கிறேன்**” என்றார். நாம்

கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்திருந்தால் அவர் நம்முடனே கூட என்றும் இருப்பார். அப்பொழுது தனிமையை என்றும் உணரமாட்டோம்.

**இரண்டாவது, மரணத்தால் வந்த துன்பம்:**

அந்த தனிமை யோபுவின் இருதயத்தில், தன் பிள்ளைகள் ஒரேடியாக மரித்ததினால் வந்தது. துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல, 10 மாதம் சுமந்து பெற்ற தன் அருமை பிள்ளைகளை பறிகொடுத்துத் தவிக்கும் தாய், தன் மகனை உச்சிமோந்து போஷித்து, வளர்த்து, ஆளாக்கி, ஐய்யோ! அவனை இழந்து பரிதவிக்கும் தகப்பன், இவர்களுக்குத் தெரியும் அந்த துயரம் எப்படிப்பட்டது என்று. அன்புக்கு பாத்திரமானவர்கள் தங்களை விட்டு பிரிக்கப்படும்போது, ஒவ்வொருவனும் கண்ணீர் மல்க, யோபுவைப்போல இப்படி கதறுவான். "என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலைப் பார்க்கிலும் பாரமாயிருக்கும். ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது" (யோபு 6:2,3).

மனித பந்தம் இருக்கிறதே அது நெருங்கியது. விலையேறப்பட்டது. தேவன் அன்பாயிருக்கிறார். தேவனைப்போலவே, மனிதனும் மற்றவர்களை நேசிக்கவும், நேசிக்கப்படவும் தகுதியுடையவனாக இருக்கிறான். இரண்டு உள்ளங்கள் இணைக்கப்படும்போது அதில்தான் என்ன பூரிப்பு, மகிழ்ச்சி! அதே சமயம் அவைகள் பிரிக்கப்படும் போதுதான் என்ன துக்கம்! இப்படி பிரிவால் வாடி, கண்ணீர் கடலில் மிதப்பவர்கள் எல்லோருக்கும், ஒரே ஆறுதல் என்னவெனில், அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் அவர்கள் அனுபவித்த அந்த நல்ல நாட்களை நினைவு கூறுவதே.

அதைத்தவிர வேறு எந்த நம்பிக்கையும் கிடையாது. ஆனால் கிறிஸ்தவனுக்கோ, ஒரு பெரிய நம்பிக்கை உண்டு. அது என்னவெனில், இவ்வுலகில் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தாலும், கடைசி நியாயத்தீர்ப்பு நாளில் ஒருவரையொருவர் சந்திக்கக்கூடிய நம்பிக்கை உண்டு. பவுல் கூறுகிறார். "அன்றியும் சகோதரரே நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைபோல, துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம். அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன்

அவரோடே கூடக்கொண்டு வருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்கு சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையினால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை ஒருவர் தேற்றுங்கள்" (1தெச 4:13-18). இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்தவன்தான் யோபு. எனினும் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்துக்கொண்டார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று சொல்லத்தக்கவனாக இருந்தான்.

**மூன்றாவதாக, தூக்கமின்மையும் அயர்வும் :**

பல நாட்கள் தூக்கமில்லாமல் கஷ்டப்பட்டவனுக்குத் தெரியும், தூக்கத்தின் மகிமை. யோபு தூக்கமில்லாமையால் அவதியுற்றான். "நான் படுத்துக்கொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன். இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்கு மட்டும் அரண்டுபுரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது" (யோபு 7:4).

எப்பொழுதும் இரவில் தான் பிரச்சனை கொடூரமாக காட்சிதரும். பகலில், ஓடியாடி வேலைசெய்து வரும்பொழுது பிரச்சனைகளை மறந்து திரிகிறோம். ஆனால் இரவின் அமைதியில் எல்லா துன்பங்களும் ஒன்று சேர்ந்து நம் முன்னே வந்து நிற்க காண்கிறோம். பல சமயங்களில் நாம் ஒவ்வொருவரும் தூக்கமின்மையால் கஷ்டபட்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சமயங்களில் எண்ண அலைகளை சிதறடிக்காமல் நம்மை நாமே சோதித்து அறியவும், அமைதியாக தேவனோடு ஜெபத்தில் உறவாடவும், அவர் நமக்கு போதித்த கட்டளைகளை நினைவு கூறவும் செய்யலாம். தேவன் நமக்களித்த வாக்குறுதிகளை எண்ணிக் கொண்டிருக்கலாம். இப்படியாக வெளியே இருந்து வந்த புயலைக் காட்டிலும் உள்ளே இருந்து புறப்பட்டு வந்த புயலால் நம்முடைய யோபு அலைக்கழிக்கப்பட்டார்.

- (தொடரும்)

# 13 எல்லாரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா?

1 கொரிந்தியர் 12:30–ல் பவுலின் 5வது கேள்வி ''எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா?'' என்பதே இந்தக் கேள்விக்கும் வசனத்தின்படியான பதில் "இல்லை" என்பது தான். எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடையவர்களல்ல. அப்போஸ்தலர்களும் அவர்களின் கைகளை வைப்பதன் மூலம் அற்புதவரங்களைப் பெற்றவர்களும் மட்டுமே புதிய ஏற்பாட்டில் குணமாக்கும் வல்லமை பெற்றிருந்தனர் (அப். 6:5, 6,8:5–7)

**குணமாக்குதல் (சுகமளித்தல்) என்றால் என்ன?**

ஒருவரது சரீரத்தின் உள்ளேயும் புறம்பேயும் இருக்கும் எவ்வித சுகவீனத்திலிருந்தும் மீட்டு முழுமையான ஆரோக்கியத்தை உணரச் செய்வது; மனரீதியாகப் பாதிக்கப்பட்ட ஒருவரை தெளிவு பெறச் செய்வது; மருத்துவ ரீதியாகவோ, மனோதத்துவ ஆலோசனை மூலமோ அல்லது இவை இரண்டுக்கும் அப்பாற்பட்ட அற்புத ரீதியிலோ சுகமளிப்பது; திருமறையில் இது மூன்றுமே இடம் பெற்றுள்ளன (மத்தேயு 9:12; மாற்கு 5:38,39; மத்தேயு 8:14,15). ஆகிலும் இவை எல்லாவற்றுக்கும் பின்னணியில் இருந்து சுகமளிப்பது தேவன் மட்டுமே (சங்கீதம் 103:3; அப் 3:12–16;2 இராஜாக்கள் 20:1–7).

மருத்துவத்தில் இன்றைக்கு எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ள நமது மருத்துவ உலகம் இக்கட்டான சூழ்நிலை உருவாகும் போது "எல்லாம் அவர் செயல்'' என்று வானத்தை நோக்கிக் கையைக் காட்டுவதைப் பார்க்கிறோம். எனவே மேலே குறிப்பிட்ட எவ்வித சுகத்தை பெறுவதற்கும் தேவனுடைய கரம் அதன் பின்னணியில் இருப்பதைக் காணக்கூடும். காரணம் அனைத்து வியாதிகளுக்கும் அடிப்படைக் காரணம் "பாவம்" (ஆதியாகமம் 3:16,17; 4:13). ஆக எவ்வித சுகமும் தேவனால் மட்டுமே கொடுக்கப்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இயேசு தமது அற்புத சுகமளித்தலில் பாவத்தை மன்னிப்பதும் வியாதியிலிருந்து சுகமளித்தலையும் ஒன்றாக்கிப் பேசினார் (மத்தேயு 9:5).

**அற்புத சுகமளித்தல்**

"சாதாரண சிகிச்சையையும் இயல்பான சிகிச்சையையும் அதிரடியாக மேற்கொண்டு கிரியை செய்யும் தெய்வீக சுகமளித்தலே, அற்புத சுகம்" என்று "சேம்பர்ஸ் என்சைக்ளோபீடியா"

(சேம்பர்ஸ் கலைக் களஞ்சியத்தில்) 'அற்புதம்' எனும் தலைப்பின் கீழ் விளக்கமளிக்கிறது. (புதிய திருமறை அகராதி பக்கம் 462). ஆகிலும் அற்புத சுகமளித்தலின் மூலம் (இயேசு உட்பட) மரித்தோரை எழுப்பியிருந்தாலும், அது நிரந்தரமாயிருக்கவில்லை. அவர்கள் மறுபடியும் மரித்தார்கள் (யோவான் 11).

அப்படியானால், அற்புத சுகமளித்தலின் நோக்கம் என்ன? பிற அற்புதங்களின் நோக்கம் இரண்டு கருத்துக்களை போதித்து வலியுறுத்துவதற்காக செய்யப்பட்டது போலவே, அற்புத சுகமளித்தலும் இரண்டு வகை நோக்கங்களை கொண்டிருந்தன. 1. அவைகளை நடப்பித்தவர்கள் தெய்வீக அதிகாரம் பெற்ற வசனத்தையே போதிக்கிறார்கள் என்று உறுதிபடுத்துவது (1பேதுரு 4:11; யாத்திராகமம் 7:9; யோவான் 10:37,38; அப்போஸ்தலர் 2:22). அதனால் ஜனங்கள் விசுவாசித்து, நித்திய ஜீவனை அடையச்செய்வதும் தான் (யோவான் 20:30,31; 5:39).

கிறிஸ்துவின் குணமாக்கும் கிரியை (அற்புத சுகமளித்தல்) எல்லாருக்கும் எக்காலத்துக்கும் உரியது எனில், பெதஸ்தா குளத்தருகில் காத்துக்கிடந்த அனைத்து சுகவீனரும் சுகம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் (யோவான் 5). ஆனால் முப்பத்தெட்டு வருஷமாய் வியாதிப்பட்டிருந்த ஒருவன் மாத்திரமே இயேசுவால் சுகமாக்கப்பட்டான். ஏன்? (யோவான் 5: 5,6,8,9). எனவே அற்புதங்களாலும் அடையாளங்களாலும், ஏற்கனவே சுகமளித்தலின் மூலம் உறுதி செய்ய வசனத்தைக் கை கொண்டு, விசுவாசித்து, நித்திய இரட்சிப்பை அலட்சியப்படுத்தி இன்றும் அந்த அற்புதங்களை எதிர்பார்ப்பதும், செய்வதாக பொய்யாக ஜனங்களை வஞ்சிப்பதும் சாபத்துக்குரியதல்லவா?

பழைய ஏற்பாட்டு அற்புத சுகமளித்தலும் மேற்குறித்த நோக்கங்களையே கொண்டிருந்தன. மிரியாமின் குஷ்டரோகமும் (எண்ணாகமம் 12:1-15), எலிசா நாகமானின் குஷ்டரோகத்தையும் சொஸ்தப்படுத்தியது (2 ராஜாக்கள் 5:8-14), எலியாவும் எலிசாவும் உயிரோடு எழுப்பின இரண்டு பெண்களின் பிள்ளைகள் (1 இராஜா. 17:17-24; 2 இராஜா. 4:1-37), ஆகிய அனைத்தும் விக்கிரக வணக்கத்தில் நாட்டையே மோசம் போக்கிக் கொண்டிருந்த ஆகாப் ராஜா - யேசபேல் ராணி ஆகியோரின் முன் தெய்வீக அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகவே. மோசே எகிப்துக்குப் போய் ஆரோனைக் கூட சேர்த்துக் கொண்டு அற்புதங்களைச்



நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்திருந்தால், அவர் நம்முடனே கூட என்றும் இருப்பார். அப்பொழுது தனிமையை என்றும் உணர மாட்டோம்.

செய்த போது, தேவன் தங்களோடு இருப்பதை ராஜாவுக்கும் (பார்வோனுக்கும்) பொய்யான அற்புதங்களைச் செய்ய முயற்சித்த மந்திரவாதிகளுக்கும் முன்பாக தேவனுடைய வல்லமை வெற்றிக் கொண்டது (யாத்திராகமம் 7:9-12; 8:7,18).

புதிய ஏற்பாட்டு சுகமளிக்கும் வரங்களை மூன்று படிகளாக பிரித்துப் பார்ப்போம்.

### 1. சுவிசேஷங்களில் அற்புத சுகமளித்தல்:

இயேசு செய்த அநேக அற்புதங்களில் சுகமாக்கும் வல்லமையும் ஒன்று. ஆகிலும் அவர் சுகமளிக்காத வியாதி எதுவும் இருக்கவில்லை (லூக்கா 4:40). பிசாசுகளை விரட்டுவது இந்த அற்புத சுகமளித்தலுடன் (ஒன்றாக) காட்டப்படவில்லை. பிசாசுகளை விரட்டுவதை தனித்துக் காட்டப்படுகிறது. (லூக்கா 4:41; மாற்கு 1:32,34). இவைகளைச் செய்தபோதும், சகல வியாதிகளையும் குணமாக்கிய போதும், ''தேவனுடைய இராஜ்யத்தை பிரசங்கிக்கவும்" (லூக்கா 4:42,43) ''பாவிகளை இரட்சிக்கவுமே'' தாம் பூமிக்கு வந்ததாக குறிப்பிட்டார் (லூக்கா 19:10). கிறிஸ்துவை நிரந்தர "டாக்டராக" வைத்துக் கொள்ள விழைந்த ஜனங்களிடத்திலே அவர் இப்படிச் சொன்னார் (லூக்கா 4:42,43). இராஜ்யம் வந்துவிட்டது என்று வாசித்து உணராத இந்தக் கூட்டம், "இன்னமும் இராஜ்யம் வர வேண்டும் என்று போதித்துத் திரியும் இந்தக் கூட்டம், வந்து விட்ட இராஜ்யத்தையல்ல, பொய்யான அற்புதங்களே தங்களுடைய முக்கிய குறிக்கோள். சரீர அங்கங்களில் **ஏற்பட்ட சுகவீனங்கள், மனரீதியான பாதிப்புகள் மற்றும் சரீர அவயவம் துண்டிக்கப்பட்டாலும்** இயேசு ஒட்ட வைத்து சுகமளித்தார். இயேசு ஓரிடத்திலும், சுகவீனப்பட்டவர்கள் ஓரிடத்திலும் இருந்தாலும் கிறிஸ்துவால் சுகமளிக்கப்பட்டது (லூக்கா 7:1-10). சில வியாதிகளுக்கு மருத்துவ ரீதியாக சுகம் கொடுத்தார் (மாற்கு 7:32-35; யோவான் 9:6). உலகிலேயே மருத்துவத்தால் இயலாத குஷ்டரோகம் சொஸ்தமாக்கப்பட்டது (யோவான் 17:12-19). மரித்தவர்களும் எழுந்தார்கள் (லூக் 7:11-16, யோவான் 11).

### 2. ''என்னிலும் பெரிய கிரியை செய்வார்கள்'' என்று இயேசு சொன்னாரே!

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்தில் போகிறபடியால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இதைக் காட்டிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.'' (யோவான் 14:12) என்று இயேசு சொன்னார், உண்மைதான். அவர்

செய்த கிரியை என்ன? அற்புத சுகமளித்தல் மட்டும் தானா? தண்ணீரை திராட்ச ரசமாக்கினாரா? (யோவான் 2) பிறவியிலேயே அங்கக் குறைவுள்ளவர்கள் சுகமாக்கப்பட்டனரா? துண்டிக்கப்பட்ட அங்கங்கள் ஒட்ட வைக்கப்பட்டனவா? மனரீதியான கோளாறுகள் நீங்கியதா? மரித்தவர்கள் எழுப்பப்பட்டனரா? தம்மை பிடிக்க வந்தவர்கள் முன்பாக காணாமல் மறைந்து போனாரா? (யோவான் 8:59). காற்றையும் கடலையும் அதட்டி அமைதிப் படுத்தினாரா? ஆம்! செய்தார்.

அற்புத சுகமளிப்பதாக கூறுவோர் அவர் செய்த இந்தக் கிரியைகளை, இங்கே, இந்த ஊரிலே செய்து தங்களை நிரூபிக்கிறார்களா? அட! மேலான பெரிய கிரியை இதற்குமேல் என்ன செய்ய முடியும்? இதையாவது செய்யக்கூடுமா? இல்லை, கண்துடைப்புக்காக நாங்களும் அற்புதம் செய்கிறோம் என்ற பெயரில், கண்ணில் புலப்படாத சுகவீனத்தை (உண்மையில் இருந்ததா எனத் தெரியாது) சுகப்படுத்தியதாகக் கூறித்திரிகிறார்களா? ஆம்! இதை மட்டும்தான் செய்கிறார்கள்.

**3. கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் அவரைக் காட்டிலும் பெரிய கிரியை செய்கிறார்கள்.**

இயேசு அற்புதங்களை அளவில்லாமல் **செய்து** தமது இராஜ்யத்துக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தினார். அப்போஸ்தலர்களும் அவர்களிடம் வரங்களைப் பெற்றவர்களும் அற்புதங்களைச் **செய்து** இராஜ்யத்தின் நற்செய்தியைப் பரப்பி ஆயிரக்கணக்கானோரை இராஜ்யத்துக்கு உட்படுத்தினர். ஆனால் கிறிஸ்துவின் சபை ஊழியர்களோ, எந்த அற்புத வரங்களையும் (வசனரீதியாக இன்று இல்லாமையால்) பெறாமலேயே, எவ்வித அற்புதங்களையும் **செய்யாமல்,** சபையாகிய இராஜ்யத்தைப் பரப்புகின்றனர். அற்புதங்களை நம்புவோரின் பார்வையில் பைத்தியமாய்த் தோன்றுகிற சுவிசேஷத்தை, வெறும் வாய்ச் சொல்லால் பிரசங்கித்து, செயல் நடத்தையால் உறுதிப்படுத்தி உலகெங்கும் ஆயிரக்கணக் கானவர்களை இராஜ்யத்துக்குட்படுத்திக் கொண்டுள்ளனர். “அற்புதங்களைக்” கண்டு விசுவாசிப்பவர்களைக் காட்டிலும் ‘‘காணாமல் விசுவாசிக்கிற’’ பாக்கியவான்களை உருவாக்குகின்றனர் (ரோமர் 10:17; 2கொரிந்தியர் 5:6). ஆம்! இயேசுவைக் காட்டிலும் ‘‘பெரிய கிரியைகளை’’ செய்பவர்கள் இவர்களே.

அற்புதத்தை பொய்யாய் நடப்பிக்கிறவர்களே! மனந்திரும்பி சத்தியத்திற்குள் வாருங்கள்.

(குணமாக்கும் வரம் தொடரும்)

**இ.ஏ.ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்.

# புதிய ஏற்பாட்டில் சபையின் உருவகங்களும், பெயர்களும்

**கடுகு விதை என்ற வகையில்** (மத்தேயு 13:31,32)

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.

**மாவில் இடப்பட்ட புளித்த மா என்ற வகையில்** (மத்தேயு 13:33)

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்.

**விலை உயர்ந்த முத்து என்ற வகையில்** (மத்தேயு 13:45,46)

மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.

**இரட்சகரால் விதைக்கப்பட்ட விதையைப் பெற்றவர்கள் என்ற வகையில்** (மத்தேயு 13:19-23)

ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருங்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

**கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்** (வெளிப்படுத்தின விசேஷம் 22:17)

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்.

**ஆயத்தமாயிருந்த கன்னியர்கள் என்ற வகையில்** (2 கொரிந்தியர் 11:2)

நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்.

**வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்** (அப் 2:41)

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.



சாத்தானோடு நமக்கிருக்கும் போராட்டங்களில் பெரியது, நமக்குள்ளே எழும் போராட்டங்கள்.

**தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்** (1 பேதுரு 3:21,22)

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். தேவ தூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

எபேசியர் 5:26 தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்.

தீத்து 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

எபிரேயர் 10:22 துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

– தொடரும்

# 6 கர்த்தர் யோசேப்புடன் இருந்தார்

## The Lord was with Joseph

(ஆதி 39:2-9)

**அறிமுகம்:**

அ) நம்முடைய வாழ்க்கையில் நம்முடன் ஆண்டவர் இருக்கிறார் என்பது நமக்கு மிகப்பெரிய ஆறுதல்

ஆ) ஆண்டவர் ஏன் யோசேப்புடன் இருந்தார்? ஏனெனில் :

**I) பாவத்தின் இச்சகத் தன்மையை யோசேப்பு அறிந்திருந்தார்**

அ) ஆதி 39:7 ஆ) நீதி 6:24;7:10

**II) யோசேப்பு "இல்லை! கூடாது !" என்று சொன்னது மட்டுமின்றி, அதன்படியே செய்தான்.**

அ) ஆதி 39:7 ஆ) தானியேல் 1:8

**III) யோசேப்பு தன்மீதான நம்பிக்கைக்கு துரோகம் செய்யவில்லை**

அ) ஆதி 39:8,9 ஆ) பிலி 4:8,9

**IV) சில காரியங்கள் தனக்குரியவைகள் இல்லை என யோசேப்பு அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:8 ஆ) எபி 11:24,25

**V) இத்தகைய செயல் பாவம் என யோசேப்பு அறிந்திருந்தார்.**

அ) ஆதி 39:9 ஆ) யாக் 4:17

**VI) இத்தகைய செயல் தேவனுக்கு விரோதமான பாவம் என யோசேப்பு அறிந்திருந்தார்**

அ) ஆதி 39:9 ஆ) சங் 51:1-4

**இறுதியாக:**

அ) கர்த்தர் நம்முடன் இருக்கும்படியாக இன்றே நாமும் யோசேப்பை போன்ற குணமுடையவர்களாவோம்

ஆ) உங்களிடம் இத்தகைய குணங்கள் உண்டா?

இ) கர்த்தர் உங்களுடன் இருக்கிறாரா?

# 1 உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமின்றி இருக்க, சில ஆலோசனைகள்.....

**1. நடந்து முடிந்தவற்றையே நினைத்து, பேசிக் கொண்டிருங்கள்:**

எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் தான். அதினால், உங்கள் பழைய பெலவீனங்களிலேயே வாழ்ந்து, எதிர்காலத்தை வீணாக்காதீர். ''சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி'', ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம இழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்". (பிலி 3:13,14).

**2. எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற கவலையினாலேயே உங்களை முழுவதுமாய் நிரப்பிக் கொள்ளுங்கள் :**

"என்னுடைய வேலை போயிடுச்சினா என்ன நடக்கும்"?, "என் பிள்ளை சேட்டை பண்ணுகிற பிள்ளையாக மாறிட்டால்?" "எனக்கு பெரிய வியாதி வந்துட்டா? ''என்னுடைய தேவைகள் சந்திக்கப்படலேனல" என்ன நடக்கும் ?..... என்ன நடக்கும்? .... என் ன நடக்கும்? மத்தேயு 6:31-34 ல் இயேசு கூறுகிறார்.

**3. ஒரு பிரச்சனை நடந்துவிட்டால், அதை தீர்ப்பதற்கு பதிலாக, அதில் குறை கண்டுபிடிக்கவே முயலுங்கள்:**

ஒரு தவறுக்கு தீர்வு காண்பதைவிட, அதில் குறை கண்டுபிடிப்பதும் சம்பந்தப்பட்டவர்கள் மேல் முறுமுறுப்பதும் எளிது ; ஆனால் அதினால் என்ன பயன்? பிலி 2:14- "நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசதிலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,"

**4. மாற்றத்தை கண்டு பயந்து, அதை எதிர்த்து நில்லுங்கள் :**

சிலர் முன்னேற்றத்தை தடுத்து, அதற்கு எதிர்த்து நிற்பார்கள். தீமையை விளைவிக்கும் மாற்றத்திற்கு தான் நாம் எதிர்த்து நிற்க வேண்டும். ஆனால், சில மாற்றங்கள் தேவைப்படுகிறது மற்றும் நல்லவைகளும் கூட ஒரு மனிதனோ, மனுஷியோ தனக்கு ஆண்டவர் தேவை என்பதை உணர்ந்து, சுவிஷேசத்திற்கு கீழ்படியக் கூடிய மாற்றம் அவசியமானது (அப் 3:19) இப்படிப்பட்ட நித்திய நன்மைக்கான மாற்றத்தை எதிர்க்கக் கூடாது !

**5. கடினப்பட்டு உழையுங்கள், உங்களால் முடிந்ததை செய்யுங்கள் ; இறுதியில் விரும்பியது நடக்கவில்லையெனில் உங்களையே குறைகூறிக் கொள்ளுங்கள் :**

கொலே 3:23- "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து,"

**6. உங்களை குறைவாகவே மதிப்பிடுங்கள் :**

அநேகர் பெருமையுடனும், தங்களை எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பினும், வேறு சிலர் தங்களால் எதையுமே சரியாக செய்யவில்லை என்ற எண்ணத்துடன் வீணாக்கிக் கொண்டுள்ளனர். மத் 22:39 " இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்பதே"

**7. குறை கண்டுபிடிக்கும் மனதுள்ளவர்களிடமே பழகிக் கொண்டிருங்கள்:**

நட்பென்பது ஒரு அருமையான விஷயம். ஆனால் சிலர், மற்றவர்களை கிழித்து, குறைகண்டுபிடித்துக் கொண்டே இருப்பார்கள். நீங்கள் அவர்களிடம் எவ்வளவுக்கதிமாய் பழகுகிறீர்களோ, அவர்கள் உங்களையும் பாதிப்பர். பிலி 4:8 - ''கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ நீதியுள்ளவைகளெவைகளோ கற்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் "

**8. ஒரே காரியத்தை மறுபடியும் மறுபடியும் செய்து கொண்டிருங்கள் ; புதிதாக எதையும் கற்றுக்கொள்ளாதீர்கள்** :

ஏற்கனவே பயனித்த பாதையிலேயே (root) மீண்டும் மீண்டும் செல்வதினால் எளிமையாக நம் இலட்சியத்தையும், புதிய நன்மைகளையும் இழக்கக் கூடும். வீட்டில் உள்ள பொருட்களைக் கூட அவ்வப்போது இடம் மாற்றினால், இடம் சுத்தமாகும். புதிய காரியங்களைக் கற்றுக்கொள்வது வாழ்வை புத்துணர்வுடன் (Fresh) வைப்பதோடு, வாழ்வின் அர்த்தத்தையும் நினைவுப்படுத்தும் (டிர 12:13,14).

**9. சோம்பேறியாயிருந்து, கஷ்டப்படாமல் பெறக்கூடிய காரியங்களை மட்டும் செய்யுங்கள் :**

தேவன் நம்மை, வேலை செய்து சுறுசுறுப்புடன் இருக்கும்படி படைத்துள்ளார். சோம்பேறியாக இருப்பவர்களுக்கு ஆரோக்கியமான மனதும், சிந்தையும் இருக்காது. நீதி 13:4 "சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்".

**10. உங்கள் கோபத்தை விட்டுவிடாதிருங்கள் ; யாரையும் மன்னிக்காதிருங்கள் :**

சிலர் தங்களுடைய கோபத்தை வாரக்கணக்கில், மாதக்கணக்கில், ஏன் வருடக்கணக்கில் வைத்துள்ளனர். அப்படிப் பட்டவர்கள் நன்றாக சந்தோஷமில்லாமல் இருக்கலாம். ஆனால், அது நல்லதல்ல என்று தேவன் கூறுகிறார். எபே 4:26 - ''நீங்கள் கோபங்கொண்டலும் பாவஞ்செய்யாதிருங்கள் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது"

இந்த ஆலோசனைகள் நீங்கள் உங்கள் வாழ்வில் சந்தோஷமும், நிம்மதியும் இல்லாமல் இருக்கவே !

(தொடரும்)

**– சகோ. கிங்ஸ்லி ராஜா (தமிழில்)**

# ஈசாக்கு

ஹாய் ! குட்டிச் செல்லங்களா ! எப்படி இருக்கீங்க ? ஹாலிடே எல்லாம் சந்தோஷமா இருந்ததா? அதே சந்தோஷத்துடன் மறுபடியும் பள்ளிக்கு போய்கிட்டு இருக்கீங்களா ?

நாம் இந்த மாதம் ஆபிரகாமுடைய செல்ல மகன் ஈசாக்கை பற்றி படிக்கலாமா ! ஈசாக்கு தன் அம்மா, அப்பாவிற்கு ரொம்பவும் மரியாதை கொடுக்கிற, கீழ்படிகிற பிள்ளை. ஒரு முறை ஆபிரகாம் ஈசாக்கை பலியிட கொண்டு சென்ற போதும், பலியிட முயன்ற போதும்கூட ஈசாக்கு அப்பாவின் சொல்படி தன் உயிரையே கொடுக்க முடிவெடுத்தான்.

அந்த ஈசாக்கு பெரியவனான போது, அவனது அம்மா சாராள் இறந்துபோயிட்டாங்க. ஆபிரகாம், ஈசாக்குக்கு ரெபேக்காணு ஒரு பெண்ணை திருமணம் செஞ்சி வைத்தாரு. ஈசாக்கு விவசாய வேலை



பார்த்தார். கொஞ்ச நாளிலே ஆபிரகாமும் இறந்து போனார். ஈசாக்கு இருந்த தேசத்திலே கடுமையான பஞ்சம் வந்தது. ஈசாக்கு அவ்விடம் விட்டு எகிப்துக்கு போக ஆசைப்பட்டார்.

தேவனோ, நீ போகாமல் இங்கேயே இரு என்றார். அதனால் ஈசாக்கு தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து கேரார் என்னும் ஊரிலே குடியிருந்து விவசாயம் செய்தார். தேவன் அதை நூறு மடங்கு பெருகும்படி ஆசீர்வதித்தார்.

அந்த பட்டணத்து ஜனங்கள் பொறாமைக் கொண்டு ஈசாக்கை விரட்டியடித்து அவரது கிணறையும் மூடிவிட்டனர். ஈசாக்கு வேறு இடத்திற்கு சென்று கிணறு வெட்டினார். அங்கேயும் தேவன் தண்ணீர் வர செய்தார். அந்த கிணறையும் மேய்ப்பர்கள் எங்களுடையது என பிடுங்கி கொண்டனர். ஈசாக்கு அவ்விடம் விட்டு வேற இடம் போய் கிணறு வெட்டினார். தேவன் அங்கேயும் அவனுக்கு தண்ணீர் கிடைக்க செய்தார். ஈசாக்கு தேவன் சொன்ன அந்த தேசத்திலே, தனது மனைவி ரெபேக்காளோடும், தனது மகன்கள் ஏசா, யாக்கோபோடும் செழிப்புடன் வாழ்ந்தார்.

பாத்தீங்களா, செல்லங்களே ! நாமும் ஈசாக்கை போல நம்முடைய

அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, நண்பர்களிடம் விட்டு கொடுத்து தேவன் சொன்னபடி வாழ்ந்தால், என்ன நடந்தாலும் தேவன் நம்மை பாதுகாப்பார்! ஆசீர்வதிப்பார்! Ok வா!

எங்க இந்த வசனத்தை மனப்பாடம் செய்யுங்க பார்ப்போம் !

**உபாகமம் 5:32**

உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிங்கள் ; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக

**- பிரியா ஆண்டனி**

# பாடம் 2 யாக்கோபு

அன்புள்ள குட்டீஸ்களுக்கு,

நமது ஆண்டவருடைய நாமத்தில் வாழ்த்துக்கள்

தோத்திரம். நீங்கள் எல்லாரும் நல்லா இருக்கீங்களா? உங்களுக்காக நான் தினமும் ஜெபம் செய்றேன். விடுமுறை நாட்களை எல்லாம் சிறப்பாக கழித்துவிட்டு, இப்ப மறுபடியும் பள்ளிக்கு போக ஆரம்பிச்சிட்டிங்களா?

நம்ம இன்னைக்கு யாரைப் பற்றிப் படிக்க போறோம்னா, யாக்கோபு என்பவரைப் பற்றி தான். இந்த யாக்கோபு யாரு தெரியுமா? ஈசாக்கு,



ரெபேக்காளுக்கு பிறந்த இரட்டை பிள்ளைகளில் இளையவன் தான் இந்த யாக்கோபு. மூத்தவன் பெயர் ஏசா. இந்த யாக்கோபு என்ன செய்தாரு தெரியுமா? ஒரு நாள் அவருடைய அண்ணன் ரொம்ப பசியா இருந்தப்ப, இவனிடம் வந்து குடிக்கிறதற்கு கூழ் கேட்டான். ஏசாவினுடைய பசிக்கொடுமையை தெரிஞ்சிக்கிட்டு தந்திரமா, சரி உனக்கு சாப்பாடு வேணும்னா, நீ உன்னுடைய சேஷ்டப்புத்திர பாகத்த எனக்கு விற்றுப் போடு என்றான். சரி சேஷ்டப் புத்திர பாகம்னா என்ன? அதாவது குட்பத்தில் மூத்த பிள்ளைக்கான ஆசீர்வாதம். பசிதாங்க முடியாம அவனும் சரி நீ என்னோட சேஷ்டபுத்திர பாகத்த வைத்துக் கொள் என்று சொல்லி, யாக்கோபிடம் விற்றுப்போட்டான். வருடங்கள் சென்றது. யாக்கோபுடைய அப்பா ஈசாக்கு முதிர்வயதானவராய் ஆனார். அப்ப அவரு தன் மூத்த மகனாகிய ஏசாவை கூப்பிட்டு எனக்கு ரொம்ப வயதாயிருச்சு நான் எப்ப மரிக்க போறேன்னு தெரியல, அதனால நான் உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன். நீ எனக்காக வேட்டையாடி சமைத்து எடுத்துட்டு வா, அப்படின்னு

சொன்னாரு. இதை தெரிஞ்சுகிட்ட யாக்கோபு, தன் சகோதரனின் ஆசீர்வாதத்தை எப்படியாவது தான் வாங்கிக் கொள்ளனும்ன்னு நெனச்சு, தன் தாய் ரெபேக்களுடன் சேர்ந்து மந்தையில் இருந்த ஆட்டை சமைத்து, தன் சகோதரனை போல இருக்க வேண்டும் என்பதற்காக, ஆட்டு தோலை எடுத்து தான் மேல் போட்டு, தன் சகோதரனாகிய ஏசாவின் ஆடையை அணிந்துகொண்டு, தன் தகப்பனிடம் சென்று, நான் தான் உங்கள் மூத்த மகன் என்று சொல்லி எல்லா ஆசீர்வாதத்தையும் வாங்கிவிட்டான். பிறகு வந்த ஏசா, இவன் செய்த எல்லா ஏமாற்றத்தையும் அறிந்து மிகவும் வருந்தினான். அதனால் எப்படியாவது தன் சகோதரனாகிய (யாக்கோபை) கொன்று விட வேண்டும் என்று எண்ணினான்.

யாக்கோபு தன் சகோதரனையும், தகப்பனையும் ஏமாற்றினதினால், அவன் தன்னுடைய வாழ்க்கை பாதையிலே பிறரால் மிகவும் வஞ்சிக்கப்பட்டு ஏமாற்றங்களை சந்தித்தான்.

ஆமாம்,குட்டீஸ்களா! நம்மளும் இந்த யாக்கோபு மாதிரி மற்றவர்களை ஏமாத்தினோம்னா தேவன் நம்ம ஆசீர்வதிக்கமாட்டாரு. பிறரும் நம்மல ஏமாத்திருவாங்க அதனால பிறரை ஏமாத்தாம நல்ல விஷயங்களை ஆண்டவருக்கு ரொம்ப பிடிச்ச காரியங்களை செய்ய வேண்டும். சரியா?

**மனன வசனம் : கலா 6:7**

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

**- பெவர்லி லிடியா**

---

## பொதுவான செய்திகள்

# இயற்கை மருத்துவத்தின் தத்துவம்

1. எல்லா வகை நோய்களுக்கும் ஒரே அடிப்படைக் காரணம், உடலில் நச்சுக் கழிவுத் தேக்கமே.
2. இக்கழிவுப் பொருட்கள், பிற நோய்க் காரணிகளான பாக்டீரியா போன்றவற்றிற்கு இடமளிப்பதால், இவை இரண்டாம் நிலைக் காரணிகளே.
3. இயற்கை மருத்துவத்தில் பல சிகிச்சை முறைகளை கடைப்பிடித்தாலும், கழிவகற்றல் என்ற ஒரே ஒரு குறிக்கோளைக் கொண்டது.
4. இயற்கையே ஒரு நோய் நிவாரணி; நம் உடல் உபாதைகளை நம்முள் இயங்கும் உயிர் சக்தியே குணமாக்கும் தன்மை கொண்டது.
5. இயற்கை வைத்தியத்தில் உணவு மருந்தாகச் செயல்படுகிறது.



## இம்மாதக் கேள்விகள்

1. இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுப்பது எது?
2. தேவன், எது வெறுமையாக தன்னிடத்தில் திரும்பாது என்கிறார்?
3. மனுசனுடைய ஆவி அவன் ............. தாங்கும்.
4. என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும் என்றது யார்?
5. முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், விழுந்துபோவது ஏன்?
6. யார் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்?
7. தேவனுடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது எது?
8. சமாதானகட்டினால் எதை காத்துக்கொள்ள வேண்டும்?
9. புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும் படிக்கு எதை கழித்துப் போட வேண்டும்?
10. நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல .............

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2013**



## சிறுவர்க்கான கேள்விகள்

1. ஈசாக்கு எப்படிப்பட்ட பிள்ளை?
2. ஈசாக்கின் விவசாயத்தை தேவன் ஏன் நூறு மடங்கு ஆசிர்வதித்தார்?
3. ஈசாக்கிடம் இருந்த மற்ற நல்ல குணம் என்ன?
4. யாக்கோபு ஏசாவை எதினால் ஏமாற்றினான்?
5. யாக்கோபு தன் தகப்பனை எப்படி ஏமாற்றினான்?
6. ஏமாற்றிய யாக்கோபு இறுதியில் பெற்றது என்ன?
7. நீ ஈசாக்கை போல விட்டுக்கொப்பாயா?
8. யாக்கோபைப் போல ஏமாற்றாமலிருப்பாயா?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2013**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. நீதி 30:9 | 6. எபே 2:8 |
| 2. சங் 63:1 | 7. ஏசா 59:1-2 |
| 3. 1 கொரி 12:27 | 8. எபி 12:16 |
| 4. எபே 5:23 | 9. எசே 13:9 |
| 5. எசே 13:8 | 10. அப் 21:13 |

## செப்டம்பர் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. V. ஜுனித்தா டேப்னி – சென்னை
2. P. சௌந்தர்பாண்டி – திருமங்கலம்
3. M. அரவிந்த் – கோவை
4. R. சேம் – உக்கிரங்கோட்டை
5. V. ஷைனி – மதுரை
6. V. ஷாலி – மதுரை
7. R. மெர்ஸி– இஞ்சம்பாக்கம்
8. R. சாமுவேல் இன்பராஜ் – இஞ்சம்பாக்கம்

## செப்டம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
2. Mrs. மேபல் சித்ரா – திருச்சி
3. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
4. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
5. M. புஸ்பராணி – நாமக்கல்
6. K. தேவ பிச்சை – நெல்லை
7. Mrs. ஹெலன் திலக் – மதுரை
8. J. ஜோசப் – கோவில்பட்டி
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
11. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு –செங்கல்பட்டு
12. Mrs. ஞானசுந்தரி நாகராஜன் –கீழப்பாவூர்
13. Sis. லிசி ராஜசேகரி – செங்கல்பட்டு
14. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
15. Mr. அலெக்சாண்டர் சாலமோன்– சிவகங்கை
16. Mrs. வசந்தா கௌசரேத் – ஆம்பூர்
17. Mrs. சிந்தனைமலர் ரவீந்தர் – ஆம்பூர்
18. Mrs. ஞானசுந்தரி – கோவை
19. Mr. பால் ஜெயராஜ் – சென்னை
20. Mrs. ஜோன் தேவநாயகம் – நெல்லை
21. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
22. Mrs. மேரி ஜெயராஜ் – மதுரை
23. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
24. Mrs. ஸடெல்லா வால்டர் – கோவை
25. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
26. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
27. Dr. சூசன் எட்வர்ட் – சென்னை
28. S.M. தவமணி தேவி – மதுரை
29. Mrs. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
30. Mrs. ரோஸ்மேரி – சென்னை
31. Ira. எத்திராசன் – சங்கரி
32. J. விஜய் – வளர்நகர்
33. Mrs. ஏஞ்சலம்மாள் – வளர் நகர்
34. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
35. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் – கொளத்தூர்
36. Mrs. ஜெமி நல்லையா – மதுரை
37. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
38. Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
39. Mr. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
40. Mr. மோகன் – குமாரபாளையம்
41. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
42. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
43. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
44. A. சந்திரா – மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சுவிசேஷ பிரபல்ய நிகழ்வுகள்

## Gospel Proclamation efforts in the month of September and October



சென்னையில் நடைபெற்ற வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டத்தில் சகோதரர் ஆன்டனி ராஜ செய்தி அளித்த போது





JC சுவிசேஷ பள்ளி பயிற்சியின் மூலம் மாணவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் சிற்றேடு மற்ற பிரதிகள் வழங்கப்படுகின்றன.







1. ஆண்டிபட்டியில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான சிறப்புக்கூட்டத்தில் பங்குபெற்ற பார்வையற்றோர்கள். 2. ஆடியோவாக CD வழங்கப்பட்டது. 3. பிரைலில் மொழியில் வாக்கு இதழும், பைபிள் பாடங்களும் பார்வையற்றோருக்கு வழங்கப்பட்டன.





ஏர்வாடி மாவட்டத்தில் ஊழியத்திற்கென்று கொடுக்கப்பட்டுள்ள இருசக்கர வாகனம்.





ஏர்வாடி JC சுவிசேஷ பயிற்சி பள்ளியின் மூலம் இவ்விருவர் ஞானஸ்நானம் பெற்ற வாலிபர்கள்.




Write to our Address or Email us, To receive these materials.

அக்டோபர் 4-ம் தேதி
கர்த்தருக்குள் நித்திரை
அடைந்த சகோதரி
**புவனேசி டேவிட் ராணி**
(சகோதரர் டேவிட் ராஜா அவர்களின் சகோதரி).
அன்னாரது குடும்பத்தாரின்
ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.






# ஜெபியுங்கள்

- அக்டோபர் 29 - 31, ஒரிசா மாநிலத்தில் நடைபெறவுள்ள JC சுவிசேஷ பள்ளி பட்டமளிப்பு நிகழ்ச்சிக்காக...
- அக்டோபர் 20, 21 ஊட்டியில் நடைபெறவுள்ள சுவிசேஷ பயிற்சிக்காக...
- நமது ஆசிரியரின் அமெரிக்க தேச ஊழியப் பிரயாணத்தில் தேவ தயவு கூட இருந்து வருவதற்காக...



Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819

Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/07/2012-2014
Posted at Arasaradi HPO on 18th, 19th October 2013





உங்கள் வீட்டிலிருந்தே பைபிள் பாடங்களை (அஞ்சல் / மெயில்வழி) பயின்று சான்றிதழ் பெற அருமையான வாய்ப்பு

பைபிள் மற்றும் இயேசு கிறிஸ்துவை பற்றிய ஆதாரங்களை விளக்கும் 2 அருமையான புத்தகங்கள்

உங்கள் ஆவிக்குரிய வாழ்வை வளர்க்கும் தமிழ் பிரசங்கங்கள் அடங்கிய புத்தகம், சிறந்த வேதாகம பிரசங்கக் குறிப்புகள் அடங்கிய புத்தகம்.

*If undelivered please return to :*

**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016, India
E-mail : obey2jesus@gmail.com
Call : 92 4421 4421
92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online